செய்தி வெளியீடு எண்.27/2021 நாள் 27.10.2021

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரியினையும், குடிநீர் கட்டணங்களையும் அக்டோபர் மாதம் 31-ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டுமென

## சென்னைக் குடிநீர் வாரியம் வேண்டுகோள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரியினையும், குடிநீர் கட்டணங்களையும் அக்டோபர் மாதம் 31-ஆம் தேதிக்குள் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறது.

வரி செலுத்துவோரின் வசதிக்காக அனைத்து பணிமனை வசூல் மையங்களும் 31.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) வரை தினந்தோறும் காலை 8.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை இயங்கும். மேலும், பகுதி/தலைமை அலுவலக வசூல் மையங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை 31.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) வரை தினந்தோறும் இயங்கும்.

மேலும், நுகர்வோர்கள் தங்களது நிலுவைத் தொகையினை இணையதளம் வாயிலாக செலுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், https://chennaimetrowater.tn.gov.in என்ற வலைதளத்தை பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாகவும் செலுத்தலாம். மேலும், 200 பணிமனைகளில் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு பயன்படுத்தி வரி செலுத்துவதற்கு ஏதுவாக PoS machine வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய அனைத்து வரிகள் / கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தலைமை அலுவலகம் முகவரி** : **எண்**.75, **நகர் நிர்வாக அலுவலகம்**, 4-**வது தளம்**, **சாந்தோம் நெடுஞ்சாலை**, **எம்**.**ஆர்**.**சி நகர்**, **இராஜா அண்ணாமலைபுரம்**, **சென்னை** – 600 028.

வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னை குடிநீர் வாரியம்